SINCE 2013
# We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

**DAILY CURRENT AFFAIRS ON O7/MARCH/2026**



# 2030-க்குள் ஏழை மக்களுக்கு 7 லட்சம் வீடுகள்

## தொலைநோக்குத் திட்டத்தை அறிவித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்





சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற 'தமிழ்நாடு 2030 கனவு மெய்ப்படும்' கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

**சென்னை, மார்ச் 6:** தமிழ்நாட்டில் வரும் 2030-க்குள் ஏழை மக்களுக்கு 7 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

அடுத்த ஐந்தாண்டுக்கான தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாக இதை முதல்வர் அறிவித்தார்.

'உங்கள் கனவ சொல்லுங்க' திட்டத்தின் நிறைவாக 'கனவுகள் மெய்ப்படும்' என்ற தலைப்பில் சென்னை நந்தம்பாக்கத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பல்வேறு துறை ஆளுமைகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

கடந்த 5 ஆண்டுகளில் மக்கள் அடைந்திருக்கும் மகிழ்ச்சிதான் நான் மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணம். சொன்னதை மட்டுமல்ல, சொல்லாத பல முத்திரைத் திட்டங்களையும் செயல்படுத்தி இருக்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் என்னுடைய கனவுகளில் பெரும்பாலானவை நிறைவேறிவிட்டன என்பதை அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அரசியல் ரீதியாக சில நெருக்கடிகள், நிதி நெருக்கடிகள் எனப் பல முட்டுக்கட்டைகள் இருந்தன. அதையும் மீறி இந்தச் சாதனைகளை செய்திருக்கிறோம்.

அடுத்து அமையப்போவதும் திராவிட மாடல் ஆட்சிதான். அடுத்த 5 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான செயல் திட்டத்தைத் தயாரிக்க திட்டமிட்டோம். தமிழ்நாட்டின் 1.80 கோடி குடும்பங்களிடம் நேரடியாகச் சென்று, அவர்களின் கனவுகளை, எதிர்பார்ப்புகளைக் கேட்டறிந்தோம்.

அதன் அடிப்படையில், அடுத்தகட்ட வளர்ச்சிக்கான எனது தொலைநோக்குப் பார்வையை 14 அம்ச திட்டமாக அறிவிக்க விரும்புகிறேன். 2030-ஆம் ஆண்டுக்குள் கிராமப்புறங்களில் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் 5 லட்சம் வீடுகளும், நகர்ப்புறங்களில் 2 லட்சம் வீடுகளும் கட்டித் தரப்படும்.

தேவைப்படும் அனைவருக்கும் போதிய மருத்துவக் காப்பீடு கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், புற்றுநோய் போன்றவற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். பேறுகால இறப்புகளைக் குறைக்கும் தரவரிசையில் இந்தியாவிலேயே முதலிடம் பெற சிறப்பு நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மனநல ஆலோசனை மையம் அமைக்கப்படும்.

**வேளாண் திட்டங்கள்:** வேளாண்மையைப் பொருத்தவரை நிகர சாகுபடி பரப்பு 50 லட்சம் ஹெக்டேராக உயர்த்தப்படும். மண்வள அட்டைகள் 43 லட்சம் உழவர்களுக்கு வழங்கப்பட்டு, இயற்கை விவசாயம் 17,000 ஹெக்டேராகவும், உயிர் வேளாண்மை ஒரு லட்சம் ஹெக்டேராகவும் விரிவுபடுத்தப்படும். வேளாண்மைக்கு ஆதாரமான நீரைச் சேமிக்க நுண்ணீர்ப் பாசனம் 21 லட்சம் ஹெக்டேராக விரிவுபடுத்தப்படும்.

மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் 1,000 மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் கட்டப்படும். உணவு உற்பத்தி 125 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்படும்.

**கல்வித் துறையில்...** அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்படும்.

2030-ஆம் ஆண்டுக்குள் உயர் கல்வியில் மொத்த சேர்க்கை 90 சதவீதத்தை எட்டும் வகையில், நிறுவனக் கட்டமைப்பு விரிவாக்கப்படும். செயற்கை நுண்ணறிவு நுட்பங்கள் கல்வியுடன் இணைக்கப்பட்டு ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் ஏஐ ஆய்வகம் உருவாக்கப்படும்.

எனது மாபெரும் தமிழ்க் கனவு, தமிழ்நாடே சமத்துவபுரமாக வேண்டும்; எங்கும் சமூக நீதி ஓங்க வேண்டும்; அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற வேண்டும். இதையெல்லாம் நனவாக்கி, 2030-ஆம் ஆண்டில், தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்துவோம் என்றார் அவர்.

### 'உத்தமர் காந்தி மாதிரி கிராமங்கள்'

அடுத்த ஐந்தாண்டுக்கான தொலைநோக்குத் திட்டங்கள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

சிறுபான்மை சமூகத்தினர் வணிகம் மற்றும் தொழில் தொடங்க கடன் பெறும் நடைமுறைகள் எளிமைப்படுத்தப்படும். வீட்டுமனை இல்லாத ஒவ்வோர் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினக் குடும்பத்துக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கிராமப்புற வளர்ச்சிக்கு உன்னதமான திட்டம் உருவாக்கப்படும். அதற்கு, 'உத்தமர் காந்தி மாதிரி கிராமங்கள் திட்டம்' எனப் பெயரிடப்படும்.

ரூ.18 லட்சம் கோடி முதலீடு, 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள், தமிழ்நாட்டின் ஏற்றுமதி 12,000 கோடி டாலராக உயர்ந்து உலக வணிக வரைபடத்தில் தமிழ்நாடு இடம் பிடிக்கும்.

தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி ரூ.2.5 லட்சம் கோடியிலிருந்து ரூ.6 லட்சம் கோடியாக அதிகரிக்கப்படும். ஐ.டி. துறையில் மட்டும் இரண்டு லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

நடைபாதை, பசுமை மரங்கள் என எழிலான சாலைகள் நகரங்களில் உருவாக்கப்படும் என்றார் முதல்வர்.

# குடிமைப் பணிகள் தேர்வு: தமிழக இளைஞர்கள் சாதனை

**புது தில்லி, மார்ச் 6:** ஐஏஎஸ், ஐபிஎஸ் உள்ளிட்ட குடிமைப் பணிகளுக்கான இறுதித் தேர்வு முடிவுகளை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

இதில், மதுரை மாவட்டம், வாடிப்பட்டியைச் சேர்ந்த எம். ராஜேஸ்வரி சுவி அகில இந்திய அளவில் இரண்டாம் இடம் பிடித்தார். இவர் உள்பட தமிழகத்தைச் சேர்ந்த 56 பேர் தேர்ச்சி பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

குடிமைப் பணித் தேர்வை யுபிஎஸ்சி ஒவ்வோர் ஆண்டும் நடத்தி வருகிறது.

முதல்நிலை (பிரிலிமினரி), முதன்மை (மெயின்) மற்றும் ஆளுமைத் தேர்வு (நேர்முகத் தேர்வு) என மூன்று நிலைகளாக இந்தத் தேர்வு நடத்தப்படும். 2025-ஆம் ஆண்டுக்கான இந்தத் தேர்வின் இறுதிக் கட்டமான ஆளுமைத் தேர்வு கடந்த ஆண்டு டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை நடைபெற்ற நிலை



ராஜேஸ்வரி சுவி



ராஜா முகைதீன்

பட்டா என்ற சிறிய கிராமத்தைச் சேர்ந்த அனுஜ் அக்னிஹோத்ரி என்ற மாணவர் அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார். எய்ம்ஸ்-இல் மருத்துவப் படிப்பை (எம்பிபிஎஸ்) முடித்து தற்போது முதுநிலை மருத்துவப் படிப்பை இவர் மேற்கொண்டு வருகிறார்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டியைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரியான எம். ராஜேஸ்வரி சுவி, அகில இந்திய அளவில் இரண்டாம் இடம் பெற்றார்.

பல்கலைக்கழகம், எய்ம்ஸ், தில்லி தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், தில்லி பல்கலைக்கழகம், மும்பை பல்கலைக்கழகம் என முன்னணி கல்வி நிறுவனங்களில் மருத்துவம், பொறியியல், மானுடவியல், அறிவியல், வணிகவியல், சட்டம், ஊடகவியல் பட்டங்களை முடித்தவர்கள் ஆவர்.

முதல் 25 இடங்களைப் பிடித்தவர்களில் 11 பேர் பெண்கள், 14 பேர் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


**பிரதமர் வாழ்த்து:** குடிமைப் பணிகள் தேர்வில் தகுதி பெற்ற அனைவருக்கும் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்ட அவர், 'அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, கடின உழைப்பு மூலம் இந்தக் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளீர்கள். தேசத்துக்கு சேவையாற்றும் மற்றும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் இந்தப் பயணத்தை வெற்றிகர

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com



தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை
தொழில் வளர்ச்சியில் இந்தியாவின் முன்னணி மாநிலம்
தமிழ்நாடு!
5 ஆண்டுகளில் 30 புதிய சிப்காட் (SIPCOT) தொழில் பூங்காக்கள்
1. ஒரகடம், காஞ்சிபுரம் (மருத்துவக் கருவிகள் பூங்கா)
2. தேனி, தேனி மாவட்டம் (உணவுப் பூங்கா)
3. சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம் (எந்திரவியல் பூங்கா)
4. மணலூர், திருவள்ளூர் மாவட்டம் (EMC மின்னணுப் பூங்கா)
5. தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம் (அறைகலன்கள் பூங்கா)
6. எறையூர், பெரம்பலூர் மாவட்டம்
7. சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம் (வாகனத் தொழில்பூங்கா)
8. திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்
9. நெமிலி, காஞ்சிபுரம் மாவட்டம்
10. கூளநாயக்கன்பட்டி, கோவை மாவட்டம்
11. தாரப்படவேடு, வேலூர் மாவட்டம்
12. வைப்பாறு, தூத்துக்குடி மாவட்டம்
13. சில்லா நத்தம், தூத்துக்குடி மாவட்டம்
14. ஏ.சாத்தனூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் (SEZ பூங்கா)
15. பாடாலூர், பெரம்பலூர் மாவட்டம்
16. புதுவாயல், திருவள்ளூர் மாவட்டம்
17. பனப்பாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம்
18. ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் (காலணி பூங்கா)
19. வாரப்பட்டி, கோவை மாவட்டம்
20. அதகப்பாடி, தருமபுரி மாவட்டம்
21. இ.குமாரலிங்கபுரம், விருதுநகர் மாவட்டம்
22. இலந்தைப்பட்டி, திருச்சி மாவட்டம்
23. இலுப்பைக்குடி, சிவகங்கை மாவட்டம்
24. சேலம், சேலம் மாவட்டம் (ஜவுளி பூங்கா)
25. அல்லிக்குளம், தூத்துக்குடி மாவட்டம்
26. கங்கை கொண்டான், திருநெல்வேலி மாவட்டம்
27. கழனிவாசல், சிவகங்கை மாவட்டம்
28. வஞ்சி நகரம், மதுரை மாவட்டம்
29. கொளத்துப்பாளையம், திருப்பூர் மாவட்டம்
30. மாரியூர், இராமநாதபுரம் மாவட்டம்
2030 க்குள் 1 டிரில்லியன்
அமெரிக்கா டாலர்
பொருளாதார மாநிலம்







**2027-ம் ஆண்டு நடைபெறவுள்ள 16-வது மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக, 'பிரகதி' (Pragati) மற்றும் 'விகாஸ்' (Vikas) ஆகிய இரண்டு சின்னங்களை (Mascots) மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மார்ச் 5, 2026 அன்று அறிமுகப்படுத்தினார்.**









**ஆந்திராவில் 2-வது குழந்தை அல்லது அதற்கு மேல் பெறும் தம்பதியருக்கு 25,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்க பரிசீலனை**

குறைந்து வரும் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க நடவடிக்கை என முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு

## தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் புதிய ஆணையர்கள் பதவியேற்பு



அதுல்ய மிஸ்ரா அபய் குமார் சிங்

சென்னை, மார்ச் 6: தமிழ்நாடு தகவல் ஆணையத்துக்கு இரு புதிய மாநில தகவல் ஆணையர்கள் பதவியேற்றனர். இவர்களுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 (மத்திய சட்டம் 22/2005) பிரிவு 15 -இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஆளுநர் ஆர். என்.ரவி, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதுல்ய மிஸ்ரா, ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய்குமார் சிங் ஆகியோரை தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மாநில தகவல் ஆணையர்களாக நியமித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அதுல்ய மிஸ்ரா, அபய்குமார் சிங் ஆகியோர் மாநில தகவல் ஆணையர்களாக ஆளுநர் ஆர். என். ரவி முன்னிலையில் பதவி ஏற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில், தமிழ்நாடு தகவல் ஆணைய மாநில தலைமை தகவல் ஆணையர் ஷகீல் அக்தர், மனிதவள மேலாண்மைத்



கிண்டி ஆளுநர் மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்து குடியரசுத் தலைவர் கையொப்பமிட்ட நியமன ஆணையை வழங்கிய ஆளுநர் ஆர்.என்.ரவி. உடன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம்.

## ரஷிய கச்சா எண்ணெய்: இந்தியாவுக்கு அமெரிக்கா அனுமதி

**ஈரான் போரால் 30 நாள்கள் விலக்கு**

**1.The Tamil Nadu Government has designated Revenue Department Day on:**

A) June 1
B) July 1
C) August 1
D) September 1

**தமிழ்நாடு அரசு வருவாய்த் துறை தினமாக பின்வரும் தேதிகளை நியமித்துள்ளது:**

A) ஜூன் 1
B) ஜூலை 1
C) ஆகஸ்ட் 1
D) செப்டம்பர் 1




**2. Tamil Nadu Chief Minister M.K. Stalin announced the formation of a Commission headed by retired Madras High Court judge to recommend legislation against caste-based hate crimes and honour killings.**

A) Justice R. Banumathi
B) Justice K. Chandru
C) Justice K.N. Basha
D) Justice S. Nagamuthu

**2. சாதி அடிப்படையிலான வெறுப்பு குற்றங்கள் மற்றும் கௌரவக் கொலைகளுக்கு எதிராக சட்டம் இயற்ற பரிந்துரைக்க, ஓய்வுபெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்படுவதாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.**

அ) நீதிபதி ஆர். பானுமதி
ஆ) நீதிபதி கே. சந்துரு
இ) நீதிபதி கே.என். பாஷா
ஈ) நீதிபதி எஸ். நாகமுத்து



**3.The AFSPA was extended by which ministry of the Government of India?**

A) Ministry of Defence
B) Ministry of Home Affairs
C) Ministry of Law and Justice
D) Ministry of External Affairs

**இந்திய அரசின் எந்த அமைச்சகத்தால் AFSPA நீட்டிக்கப்பட்டது?**

A) பாதுகாப்பு அமைச்சகம்
B) உள்துறை அமைச்சகம்
C) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்
D) வெளியுறவு அமைச்சகம்



**4. Which country is the largest milk producer in the world?**

A) United States
B) China
C) India
D) Brazil

**உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளர் நாடு எது?**

A) அமெரிக்கா
B) சீனா
C) இந்தியா
D) பிரேசில்




**5. Consider the following statements:**

1. The draft National Labour and Employment Policy is called **Shram Shakti Niti 2025**.
2. It was released by the Ministry of Labour and Employment.
3. The policy aims to improve employment generation and labour welfare.

Which of the statements given above are correct?

A) 1 and 2 only
B) 2 and 3 only
C) 1 and 3 only
D) 1, 2 and 3

பின்வரும் அறிக்கைகளைக் கவனியுங்கள்:

1.தேசிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை வரைவு ஷ்ரம் சக்தி நிதி 2025 என்று அழைக்கப்படுகிறது.
2.இது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.
3.இந்தக் கொள்கை வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழிலாளர் நலனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளில் எவை சரியானவை?
A) 1 மற்றும் 2 மட்டும்
B) 2 மற்றும் 3 மட்டும்
C) 1 மற்றும் 3 மட்டும்
D) 1, 2 மற்றும் 3



# SHRAM SHAKTI NITI 2025

## A Vision for India's Workforce

- The Union Ministry of Labour and Employment has released the draft National Labour and Employment Policy — Shram Shakti Niti 2025 for public consultation.
- Rooted in the ethos of śrama dharma — the dignity and moral value of work — the policy aims to balance protection, productivity, and participation for every worker.
- It envisions a future-ready, fair, and inclusive workforce, empowering both workers and enterprises for sustainable growth.
- Labour being a Concurrent List subject, both the Centre and States share responsibility for its governance.